THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

LIBRARY, STATE LEGISLATURE 1959 MADRAS

Monday, the 16th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: கனம் ஸ்ரீ பி. கக்கன் அவர்களும், கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்களும் சென்னையில் இல்லாததினால் அவர்கள் பதிலளிக்க வேண்டிய கேள்விகள் இன்றையதினம் எடுத்து கொள்ளப்பட மாட்டா. அவர்கள் வந்த பிறகுதான் எடுத்துக்கொள்ளப்படும்.

All-India Conferences

* 361 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of Sri K. Sattanatha Karayalar): Will the Hon. the Chief Minister be pleased to lay on the table of the House a list of the various All-India Conference wherein this Government was represented in 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM: Four copies of the statement giving the required information have been placed in the Legislature Library for reference by the Members of the Legislature.

SRI S. LAZAR: Sir, is there a proposal before the Government to depute one or two members of this House, who may have some special knowledge about the particular subjects, to every one of these conferences?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, most of these conferences are at the official level. I do not think it would be possible to depute hon. Members to these conferences.

Chemical fertilizers

* 362 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of Sri K. Sattanatha Karayalar): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the agencies that are distributing chemical fertilizers to the agriculturists in the State; and

(*b*) the quantity of chemical fertilizers that are made available for distribution to the agriculturists in 1958–59?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nitrogenous fertilizers are distributed under the State Trading Scheme to the agriculturists through selected private merchants and co-operative societies. The other fertilizers are distributed by the normal trade.

[16th February 1959

(*b*) During 1958–59 (up to the end of October 1958, the following quantities of the various chemical fertilizers have been made available for distribution to the ryots :—

	TONS.
Ammonium sulphate	41,820
Urea	7,888
Ammonium sulphate nitrate	6,561
Superphosphate	20,925

Information regarding other fertilizers is not available.

SRI N. R. THIAGARAJAN : அமோனியம் ஸல்பேட் விநியோகிப்பதில் மதுரை ஜில்லாவிற்குக் கிடைக்கும் உரத்தில் மாதம் இவ்வளவுதான் விநியோகிக்க வேண்டும் என்று கலெக்டர் உத்தரவிட்டிருக்கிறார். ஒவ்வொரு மாதமும் விவசாயிகளுக்கு அது தேவையில்லை. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலும், ஜூன், ஜூலை மாதங்களிலும் விநியோகிக்க வேண்டும் என்று கலெக்டருக்குச் சர்க்கார் உத்தரவிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'மாதம் இவ்வளவு' என்று சொல்வது சராசரியிலே இருக்கலாம். இதை மேலும் அரசாங்கம் கவனிக்கும்.

SRI V. SUBBIAH : அமோனியம் ஸல்பேட் பூசாரத்தைக் கெடுத்துவிடுகிறது என்று விவசாயிகள் நம்புவதால் பாஸ்பேட், யூரியா, நைட்ரேட் போன்ற உரங்களை [illegible] தருவித்து விநியோகிக்க உத்தேசமுண்டா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : அமோனியம் ஸல்பேட் பூசாரத்தைக் கெடுத்துவிடுகிறது என்று விவசாயிகள் கருதுவதாகத் தெரியவில்லை. அதிகமாகக் கேட்கிறார்கள். முக்கியமாக அமோனியம் ஸல்பேட் பற்றாக்குறையினாலே யூரியா. நைட்ரேட் போன்றவைகளை அதிகமாகக் கொடுத்து, அவைகளை விவசாயிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு மற்றவற்றை வாங்கினால் தான் அமோனியம் ஸல்பேட் கொடுப்பது என்று இருந்தது. அதற்கு விவசாயிகள் ஆட்சேபணை தெரிவித்தார்கள். ஆகையால், அவ்வாறு இப்பொழுது வற்புறுத்தப்படுவதில்லை. அது ஒன்றுதான் மாறுதல்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister how the figure compares with the previous year's figure and may I also know whether the whole quantity that is available for the year 1958–59 has been completely distributed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM Whatever is available is certainly distributed because the demand is much larger. When compared with the previous year, this year I can say is not bad.

SRI A. CHIDAMBARANATHA NADAR : Sir, is there any possibility on the part of the Government to supply more fertilizers in addition to the present quota?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of India have recently stated that they would do their best to increase the import of fertilizers.

16th February 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, there has been a lot of abuse and black-marketing in spite of the best efforts put forth by the Government. Will the Government consider the desirability of opening more stores or co-operative stores in all the different parts of the district with a view to putting an end to this trouble?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Wherever cases of abuse and black-marketing are brought to the notice of the Government, Collectors have been asked to take very severe action on them. Our Government also have been increasing the number of co-operative agencies in this matter.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ப்ளாக் ஏரியாவில் கூட்டுறவு சொஸைட்டிக்கு இந்த உரங்களை விநியோகிக்கும் உரிமை தரப்படுகிறது. ஆனால், ப்ளாக் அல்லாத ஏரியாக்களில் ப்ரைவேட் ஏஜென்ஸிகளுக்கு அந்த உரிமை கொடுக்கப்பட்டிருப்பதை மாற்றவேண்டும் என்று பலவிதமான முறையீடுகள் சர்க்காருக்கு வந்திருக்கின்றனவே, அவைகளின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ப்ளாக் அல்லாத ஏரியாக்களிலே பாதி கூட்டுறவு சொஸைட்டிக்குக் கொடுக்கப்படுகிறது. ஒன்றிரண்டு இடங்களில் கூட்டுறவு சொஸைட்டி விநியோகிப்பதைப்பற்றிக் கூட புகார் வந்திருந்தது.

SRI S. LAZAR : மாகாணத்தின் தேவை எவ்வளவு ? தேவைக்கு ஏற்ற அளவு அது கிடைக்கப்பெறுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் புள்ளி விவரங்கள் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI A. GOVINDASAMY : இந்த உரம் வாங்குவதற்கு அரசாங்கம் கடன் கொடுத்து வருகிறது. போதுமான உரம் கிடைக்காததால் பணத்தை வீண் செலவு செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, கடனைப் பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக உரமாகக் கொடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக உரம் வாங்க சிட்டுக் கொடுப்பார்கள். அதைக் கொடுத்து உரம் வாங்குவது என்பதுதான் இப்பொழுது ஏற்பாடு. அதுவும் கூட்டுறவு சங்கத்திலிருந்து வாங்கவேண்டும்.

SRI K. R. NALLASIVAM : தனிப்பட்ட முறையில் விற்டனை செய்வதற்காகவும், சர்க்கார் கொடுக்கின்ற தக்காவக் கடன்களுக்காக என்று கொடுக்கக்கூடிய உர வகைக்காகவும், உர வகையிலே என்ன விகிதாசாரம் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தக்காவிக் கடன் வேறு குறுகிய காலக் கடன் (ஷார்ட்-டெர்ம் லோன்) வேறு. ரூபாய் 500-க்கு மேற்படாத வகையிலே இது கொடுக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : நம்முடைய மாநிலத்தில் உரம் பற்றாக் குறையாக இருக்கிறது. அதே சமயத்தில் உணவுப் பற்றாக்குறையும் இருக்கிறது. இந்தக் காரணத்தினால் வியாபாரப் பொருள்களுக்கு (கமர்ஷியல் க்ராப்ஸ்) கொடுக்கும் இந்த உரங்களைக் குறைத்து, உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அவைகளுக்குக் கொடுப்பதை அதிகரித்துக் கொடுக்கும்படி அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உணவுப் பற்றாக்குறை இல்லை. உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத்தான் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், மற்றப்படி விவசாயம் சீராக அபிவிருத்தியடைய வேண்டுமென்றால் மற்றப் பயிர்களுடைய உற்பத்திக்கும் ஆதரவு கொடுத்தாக வேண்டும். அதற்குக்கூட அதிகமாகக் கொடுப்பதில்லை. இருப்பதைப் பகிர்ந்து அதற்கும் உரம் விநியோகிக்கப்படுகிறது. அதைக் குறைப்பதற்கில்லை.

SRI S. M. ANNAMALAI : இந்த ரசாயன உரம் கிடைக்காததற்குக் காரணம் இது சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்படுகிறது என்பது ஒன்று. இரண்டாவதாக, அரிசி வெள்ளையாக இல்லை என்று வியாபாரிகள் நெல்லை ஊறவைக்கும்போது அமோனியம் ஸல்பேட்டையும் கூடவே உபயோகிப்பதால், அரைத்த பிறகு அரிசி வெள்ளையாகக் காணப்படுகிறது. இதனால் படியொன்றுக்கு ஒரு அணா அதிகமாகக் கிடைக்கிறது என்பதனால் ஸல்பேட் உபயோகிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி துஷ்பிரயோகங்கள்—கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது போன்று—ஒரு அளவுக்குத்தான் இருக்கும். எப்பொழுதெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு அவை வருகிறதோ அதைத் தவிர்க்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

SRI A. A. RASHEED : Sir, how many fertilizers factories are to be established in our State during the Second Five-Year Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question may be put to the Hon. the Minister for Industries.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, in the Kanyakumari district, distribution is made entirely through co-operative societies. From the public point of view, this system is working very satisfactorily. May I know whether from the Government point of view, this system is working satisfactorily, and, if so, it can be extended to other districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea about it, nor do I have any complaints about the distribution in the Kanyakumari district. The Government have no such idea of extending the distribution to private dealers in the other districts.

SRI N. MARUDACHALAM : ரஸாயன உரங்களை பெருநிலச் சொந்தக்காரர்கள் மொத்தமாக வாங்கிக்கொண்டுபோய் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ? சாதாரண விவசாயிகளுக்கு அந்த ரசாயன உரம் கிடைப்பதில்லையாகையால், அவர்களுக்குக் கிடைக்கிற மாதிரி அரசாங்கம் உதவி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி தகவல் ஒன்றும் அரசாங்கத்தினிடம் இல்லை.

SRI M. K. SOMASUNDARAM : ரசாயன உரங்கள் தாலூகா தலை நகரங்களில் விநியோகிக்கப்படுவதால் சாதாரண விவசாயிகளுக்கு அவை கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. அப்படித் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு, விவசாயிகள் எங்கு அதிகமாக இதை வாங்குகிறார்களோ அங்கு ஒரு சென்டர் ஏற்படுத்தி அங்கு விநியோகிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயங்களை கலெக்டர்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

16th February 1959]

Sri V. K. KOTHANDARAMAN : கழிவு (மொலாஸஸ்) கூட உரமாக உபயோகக்கப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதை உரமாக உபயோகப்படுத்துவதற்காக லைசென்ஸ் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதைத் தவறான முறையில் உபயோகப்படுத்துகின்ற காரணத்தால் லைசன்ஸ் கொடுக்க முடியாது என்று மறுக்கப்பட்டு வருவதும் சர்க்காருக்குத் தெரியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டும் சர்க்காருக்குத் தெரியும்.

Text-Book Committee

* 363 *Q.*—Sri N. K. PALANISAMI and Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the names of the members of the Text-Book Committee; and

(*b*) whether there are any representatives of teachers in that Committee?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The names of the members of the Text Book Committee are kept confidential and it will not be in public interest to divulge the names.

(*b*) Yes, Sir.

Sri N. K. PALANISAMI : அனுபவமும், திறமையும் உள்ள ஆசிரியர்களை டெக்ஸ்ட் புக் கமிட்டியில் சேர்க்காததின் காரணமாக தவறுதலானதும் தப்பிதமுமான புத்தகம் எழுதியதால் சமீபத்தில் அது சம்பந்தமாக ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்புகொடுத்திருப்பதன் காரணமாக அந்தக் கமிட்டியில் ஆசிரியர்களை மட்டும் நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : அந்தக் கமிட்டியில் நிறைய ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அந்தக் கமிட்டிக்கும் ஹைகோர்ட்டு தீர்ப்புக்கும் சம்பந்தம் இல்லை. அந்தப் புத்தகத்திற்கும் ஜட்ஜ்மெண்டிற்கும் சம்பந்தம் இல்லை.

Sri T. S. RAMASWAMY PILLAI : May I know whether the book which was said to be bad by the High Court in its judgment was approved by this Committee? If so, how was it published? Was it published by a private agency or by the Government?

Mr. SPEAKER : I am afraid the hon. Member is wandering away from the question. The question is about the names of the Members. From names the hon. Member has gone to the books. It will not be very appropriate.

Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, I want to know whether that book was approved by this Committee.

The Hon. Sri C. SUBRAMANIAM : I have already said that this Committee has nothing to do with that book.

Rest-houses at tourist centres

* 366 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of rest-houses in the State; and

(*b*) whether there is any proposal to construct rest-houses in all the tourist centres in the State?